# வாவு வஜீஹா வனிதையர் கல்லூரி

## காயல்பட்டணம்

### நுகர்வோர் மன்றக்கூட்டம் 09.09.2016

காயல்பட்டணம், வாவு வஜீஹா வனிதையர் கல்லூரியில் 09.09.2016 வெள்ளிக்கிழமை மதியம் 2 மணியளவில் நுகர்வோர் மன்றக்கூட்டம் நடைபெற்றது. முதலாமாண்டு கணிதவியல் துறை மாணவி S. ரிஷாதா கிராத் ஓத, தமிழ்த்தாய் வாழ்த்துடன் தொடங்கியது.

கல்லூரி முதல்வர் முனைவர் திருமதி J. எல்லோரா M.Com., M.Phil., Ph.D., தலைமை தாங்கினார். நுகர்வோர் மன்ற தலைவரும், பொருளியல் துறைத் தலைவருமான M. சூரத் ஷிபா M.A., M.Phil., வரவேற்புரை வழங்கினார். கல்லூரி இயக்குநர் முனைவர் திருமதி Dr. மெர்ஸி ஹென்றி M.A., Ph.D., வாழ்த்துரை வழங்கினார். சிறப்பு விருந்தினர்களாக திருச்செந்தூர் வழக்கறிஞர் M. சுகன்யா B.A., B.L., நுகர்வோர் என்றால் யார்? என்பது பற்றியும், வழக்கறிஞர் S. கிரிஷ்குமார் B.Com., B.L., மனித உரிமைகள் பற்றியும், வழக்கறிஞர் J.S.D. சாத்ராஜ் B.Sc., B.L., பெண் சாதனையாளர்கள் பற்றியும் சிறப்புரை வழங்கினார்கள். இக்கூட்டத்தில் வழக்கறிஞர்கள் திருமதி ஆனந்தவல்லி, திருமதி விமலா, திருமதி சோனியா ஆகியோர் கலந்து கொண்டனர். நுகர்வோர் மன்ற மாணவ தலைவர் S.X. செய்யது ஹலிமா நன்றியுரை வழங்கினார். மூன்றாம் ஆண்டு கணிப்பொறியியல் துறை மாணவி துஆ ஓத, தேசிய கீதத்துடன் விழா இனிதே நிறைவு பெற்றது.

இவ்விழாவில் நுகர்வோர் மன்றம் சார்ந்த பேராசிரியர்களும், மாணவிகளும் கலந்து கொண்டனர்.